# வள்ளுவம் சுட்டும் அரசியல் - மானிடவியல் பார்வை

இரா. முருகன்

**முன்னுரை:** தமிழின் இலக்கிய வளம் நீண்ட பாரம்பரியம் உடையது. பொற்காலமாகக் கருதப்பெறும் சங்ககால இலக்கியங்கள் தமிழர்களின் வளர்ச்சி நிலையோடு வீழ்ச்சி நிலையையும் பேசுகின்றன. தமிழ்ச்சமூகத்தின் அவலநிலையை மாற்றத் தோன்றிய அருமருந்தாக நீதி இலக்கியங்கள் விளங்குகின்றன. இவ்விலக்கியங்கள் சமூக நலனுக்கு ஆக்கம்தரும் கருத்துக்களை வரவேற்றும், சமூகச் சிதைவுக்குக் காரணமான கருத்துக்களுக்கு எதிர்க்குரல் எழுப்பியும் தனது ஆளுமையை வெளிப்படுத்தியுள்ளன. தமிழ்ச்சமூகம் எண்ணத்தவறிய கருத்துக்களையெல்லாம் சுட்டிக்காட்டியதோடு, அவர்களை நல்வழியில் செல்ல மடைமாற்றமும் செய்தன. தமிழர்களின் வாழ்வியலைப் பதிவு செய்தவை சங்க இலக்கியங்கள். வாழ்வியலுக்குப் புறம்பான அறம்மாறிய நிகழ்வுகளுக்குரிய அறத்தைப் போதித்தலை நீதி இலக்கியங்கள். வாழ்வியலைப் பிழிந்து சமைக்கப்பட்ட இலக்கியங்களான நீதி இலக்கியங்களிலும் தொல் சமூகத்தினரின் வாழ்வியல்கூறுகள் காணப்படுகின்றன.

நீதிஇலக்கியங்களான பதினெண்கீழ்கணக்கு நூல்கள் அகம், புறம், அறம் எனும் பாடுபொருள்களைக் கொண்டிலங்குகின்றன. இதில் அறம்தவறிய சமூகத்திற்கு ஆக்கம்காணத்துடித்தவை மொத்தம் 11 நூல்கள். அறம் பேசிய இப்பதினொன்றில் முதன்மையானதாகக் குறிக்கப்பெறுவது வள்ளுவர் சமைத்த திருக்குறள். இந்நூலில் உள்ள அரசியல் என்னும் இயலில் தொல்சமூகத்தினரின் வாழ்வியல் கூறுகள் காணக்கிடைக்கின்றனவா? என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தொல்குடிச் சமூக அமைப்பு:** காடுகளில் வேட்டையாடி விலங்குகளையே உணவாகக் கொண்ட ஆதி பொதுவுடமைச் சமூக மக்கள் நாகரீக மாற்றத்தினால் காடுகளை விட்டுவிட்டுத் திருந்திய வாழ்க்கையான நகர வாழ்க்கையை மேற்கொண்டனர். குறிஞ்சி மற்றும் முல்லை நிலத்தின் காடுவாழ் மக்களே மருதத்திணையில் நகர வாழ்வை மேற்கொண்ட நாகரிக மக்களாக விளங்கியதை இலக்கியங்களின் வழி அறிய முடிகிறது.

தொல்குடிகளின் வளர்ச்சியடைந்த நிலையையும், அவர்களுடைய சமூக மற்றும் பண்பாட்டின் எச்சத்தினையையும் கொண்டிருப்பவர்களே இன்றுள்ள ‘பழங்குடிகள்’ ஆவார். பொதுவாகப் பழங்குடி என்னும் சொல் தொன்மை நிலையையும், வளர்ச்சியடையாத பண்பாட்டையும் கொண்டுள்ள மக்கள்குழுவைக் குறிக்கிறது. “இச்சொல்லை விட்டுவிட்டுப் “பழங்குடிச் சமுதாயம்” என மாற்றிக்கொள்ளலாம் என்று சில மானிடவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். இம்மொழித்தொடர் தொன்மைச் சமுதயாம் (Primitive society), எழுத்தறிவிற்கு முந்தைய சமுதாயம் (Pre-Literate society) போன்ற மொழித்தொடர்களுக்கு இணையாக இருக்கும் என்பதே இதற்குக் காரணம் ஆகும். ஆனால் அதேநேரத்தில் பழங்குடி என்னும் சொல்லைத் தட்டிக்கழிக்க இயலா நிலையும் உள்ளது என்று பக்தவச்சலபாரதி குறிப்பிடுகிறார்.

டிரைப் (Tribe) எனும் ஆங்கிலச்சொல்லின் மொழிபெயர்ப்பான பழங்குடிகள் எனும் சொல் இன்றுள்ள பழங்குடிச் சமூக அமைப்பையே (Tribe community) குறிக்கிறது. எனவே பழமையான குடிகள் எனும் பொருளைக் குறிக்கும் ‘தொல்குடிகள்’ எனும் சொல்லையே ஆதி பொதுவுடைமை மக்களைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தலாம்.

**இனக்குழு வாழ்க்கை முறை:** கூட்டுவாழ்வை மேற்கொண்ட தனிமனிதர்களின் தொகுதியே சமூகம். இச்சமூகத்திற்கு அடிப்படையான மனிதனின் தோற்றம் என்பது வரையறுக்கமுடியாத ஒன்றாகும். மனிதன் தோன்றியது முதல் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்துள்ள இன்றையநிலை வரையில் மனித குலத்தின் வளர்ச்சிப் படிநிலைகளைக், “காட்டுமிராண்டி நிலை, அநாகரீக நிலை, நாகரீக நிலை”[2] எனும் மூன்று நிலைகளில் ஏங்கெல்ஸ் பகுத்துக்கூறுகின்றார்.

ஆதிமனிதர்கள் காட்டுமிராண்டி நிலையில் விலங்குகளோடு விலங்குகளாய் வாழ்வு நடத்தியதால் பழங்களையும் கொட்டைகளையும் தின்று, பின்பு மீன் மற்றும் நீர்வாழ் உயிரினங்களையும் உணவாகக் கொண்டு வாழ்ந்தனர்.

நாகரீக வளர்ச்சிபெற்ற மக்களின் வாழ்க்கை முறைக்கு முற்றிலும் முரணானதொரு வாழ்வியல் நிலையைக் கொண்டிருந்த சமூக அமைப்பு 'இனக்குழு' எனக் கருதப்பெறுகின்றது. வாழ்வியல் நிகழ்வுகளின் பெரும்பாலான ஒத்திசைவு குழுஅமைப்புக்கு அடிப்படையாக இருந்திருக்க வேண்டும். வாழ்க்கை முறைகளில் நிகழ்ந்த ஒரு சில வேறுபாடுகள் குழுப்பிரிவினைக்குக் காரணமாக இருந்திருக்க வேண்டும். வாழ்க்கை முறைகளில் நிகழ்ந்த ஒரு தலைவனைக் கொண்டிருந்தது. வீரம், கொடை, புகழ், மருத்துவம், மந்திரம் என அனைத்து நிலைகளிலும் சிறந்து விளங்கியவனே இனக்குழுத் தலைவனாகக் கருதப்பெற்றான். இன்னொரு குழுவினரிடமிருந்து தன் குழுவைக் காக்க வேண்டிய நிலையில் இனக்குழுத்தலைவனுக்கு வீரம் முதன்மையாகக் கருதப்பெற்றது. ஒவ்வொரு குழுவின் இனக்குழுத்தலைவனும் அக்குழுவிற்குத் தெய்வமாக விளங்கினான். இதனை,

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்" (குறள் 388)

எனும் வள்ளுவ வரிகள் புலப்படுத்துகின்றன.

**அ. இனக்குழுவும் தலைவனும்:** வீரநிலைக்காலப் பண்பாட்டில், வீரத்தில் முதன்மை பெற்றவனே இனக்குழுத் தலைவனாகக் கருதப்பெற்றான். சில இனக்குழுக்களில் தலைவன், பூசாரி, மருத்துவன் என எல்லா நிலைகளிலும் இனக்குழுத் தலைவனே சிறந்து விளங்கினான். இத்தலைவனுக்கென சில குணங்கள் வரையறுக்கப்பட்டன. இக்குணத்தினை வள்ளுவம்,

"கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி" (குறள் 390)

என்கிறது. அதேபோல் தலைவனுக்குரிய ஆறு அங்கங்களையும் (உணவுத்தேடல், போர், வேட்டை என) எல்லா நிலைகளிலும் கூட்டு வாழ்க்கையையே மேற்கொண்டிருந்தனர். இனக்குழுச் சமூகத்தினுடைய கூட்டுவாழ்க்கைமுறையின் எச்சத்தினை வள்ளுவரும் தம்குறள் வரிகளில் குறித்து செல்கிறார். சுற்றத்தாரால் சூழப்பட வாழ்பவனின் தன்மையை,

"சுற்றத்தால் சுற்றப் படஒழுகல் செல்வந்தான்
பெற்றத்தால் பெற்ற பயன்" (குறள் 526)

எனும் குறட்பாவிலும், நற்பண்புகளைக் கொண்டு விளங்குகின்ற ஒருவனை விட்டு சுற்றத்தார் அகலமாட்டார் என்பதனை,

"பெருங்குடையான் பேணான் வெகுளி அவனின்
மருங்குடையார் மாநிலத்து இல்" (குறள் 526)

எனும் குறட்பாவிலும் புலப்படுத்துகிறார். இதன்வழி குழுவாகக் கூடி வாழும் மக்கள் இயல்பை விரும்பும் வள்ளுவரின் எண்ணம் வெளிப்படுகிறது இவை போன்ற நிகழ்வுகள் ஆதி பொதுவுடமைச் சமூகஅமைப்பில் காணப்பெற்ற இனக்குழுச் சமூகத்தின் எச்ச நிலையையே வெளிப்படுத்துகின்றன.

ஆதி சமூக அமைப்பில் உயர்நிலையில் வைத்துப் போற்றப்பெற்ற இனக்குழுத் தலைவனே எல்லா நிலைகளிலும் சிறந்து விளங்கினான். இச்சமூக அமைப்பில் "மக்களுக்காக மன்னன்" எனும் கொள்கை நிலவியது. இங்கு இனக்குழுத் தலைவன் தான் சார்ந்த குழுவினரின் நலன் நாடுபவனாகவே விளங்கினான். சுற்றத்தாரை வருத்தாத தலைவனின் நிலையினை,

"குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்" (குறள் 549)

என்கிறார். வரிவசூலித்தல், தண்டனை அளித்தல் போன்ற காரணங்களினால் குடிமக்களை வருத்துதல் என்பது மன்னர்ஆட்சியின் இயல்பு. இதற்கு முன்னர் பெற்ற இனக்குழுச் சமூக அமைப்பின் தன்மையை உணர்த்த விரும்பிய வள்ளுவர் "குடிபுறங் காத்தோம்பி" எனும் சொல்லாடலைப் பயன்படுத்தியுள்ளார். இதன்வழி தன்னுடைய

புறப்பகுதியில் வாழும் குடிகளாகிய சுற்றாத்தாரை வருத்தாத இனக்குழுத்தலைவனின் தன்மை புலனாகிறது.

**ஆ. மறுபங்கீடு செய்தல்:** ஆதி பொதுவுடமைச் சமூகத்தில் தனித்தச் சில தகுதிகள் எதுவுமின்றி மறுபங்கீடு (Re - Distribution) செய்பவன் எனும் நிலையிலேயே இனக்குழுத்தலைவன் விளங்கினான். மற்ற சமயங்களில் மக்களோடு மக்களாக இயல்பான நிலையிலேயே வாழ்ந்துவந்தான். "மன்னர்கள் போரில் பெற்ற செல்வங்களை வீரர்களுக்கு அளித்து மகிழ்ந்தனர். புலவர் என்றும் பாராது நாடுகளையும், ஊர்களையும் வழங்கியதோடு பெருஞ்சோறு படைத்து அவர்களின் பசியையும் போக்கினர்"[3] என்கிறார்.

வேட்டையில் கிடைத்த பொருட்களைப் பங்கிட்டு வழங்கியதுபோலவே போரின் வழிப்பெற்ற பொருட்களையும் புலவர், பாணர், கூத்தர், பொருநர், விறலியர் ஆகிய இரவலர்களுக்குப் பரிசாக வழங்கினர். இத்தகைய செயல்கள் ஆதி பொதுவுடமைச் சமூகத்திய இனக்குழுத் தலைவனின் செயல்பாடுகளையே குறிக்கின்றன.

பொருள் வரும் வழிகளை அறிந்து பொருளைப் பெறவேண்டும். சேர்த்த பொருள்களைக் காத்திருந்தும், காத்தவற்றை வகுத்துச் செலவு செய்தலும் தலைவனின் இயல்பு என்பதைச் செந்நாப்போதகர்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள் 385)

எனும் வரிகளில் விளக்கிச் செல்கிறார். இக்குறட்பாவில் வரும் வகுத்தல் எனும் சொல்லாடல் ஆதி சமூகஅமைப்பில் நிலவிய மறுபங்கீடு செய்தலின் மிச்ச சொச்சத்தையே புலப்படுத்துகிறது.

**வேட்டைச் சமூக அமைப்பு:** வேட்டைச் சமூக அமைப்பினை "காட்டமிராண்டி நிலையின் தலைக்கட்டத்தில் வேட்டையே முதன்மையான தொழிலாக விளங்கியது. இக்கட்டம் கண்டுபிடிக்கப்பட்டதிலிருந்து தொடங்குகின்றது. இதனால் காட்டுவிலங்குகளின் இறைச்சி வாடிக்கையான உணவுப்பொருளாயிற்று. வேட்டையாடுதலும் சகஜமான தொழிலாயிற்று"4 என்று ஏங்கெல்ஸ் குறிப்பிடுகிறார். காலப்போக்கில் வேட்டைத்தொழில் பல்வேறு மாற்றங்களை அடைந்தது. இவ்வளர்ச்சி நிலையினை, "உணவு சேகரித்தலோடு வேட்டையை மேற்கொண்ட 'கீழ் வேட்டைச் சமுதாயம்' என்றும் வேட்டையாடுவதோடு மீன் பிடிப்பதையும் மேற்கொண்ட 'உயர்நிலை வேட்டைச்சமுதாயம்' என்றும் இருவகையான நிலைகளில் தாம்ஸன் பகுத்திருப்பதை வானமாமலை குறிப்பிடுகின்றார்."[5] இதன்வழி ஆதி மனிதனுக்கு இயற்கைப் பொருட்களே உணவாக விளங்கியதை அறிய முடிகிறது.

தொல்சமூகத்தினர் வேட்டையின்போது வில் அம்பு முதலிய கருவிகளைப் பயன்படுத்தினர். கால வளர்ச்சியினால் கண்டறியப்பட்ட உலோகங்களால் வேல், வாள் முதலிய கருவிகள் பிற்காலத்தில் வேட்டைக் கருவிகளாகப் பயன்கொள்ளப்பட்டன. வள்ளுவர் சுட்டும் தரநிலைச் சமூக அமைப்பில் மன்னர்கள் மனித வேட்டைக்கு (போர்) வேல், வாள் போன்ற கருவிகளைப் பயன்படுத்தியதை அறிய முடிகிறது. "எனமாமோ, சாவன்தே, புசுமன் ஆகிய உலகப் பழங்குடி மக்களும், மலைரெட்டி, முண்டர், கோயர் ஆகிய இந்தியப் பழங்குடி மக்களும், கசர்வர், அரநாடன் ஆகிய தமிழகப் பழங்குடி மக்களும் வேட்டையையே முதன்மையான தொழிலாகக் கொண்டிருந்தனர்."[6] எனக்குறிப்பிடுகின்றார்.

**அ. வேட்டைச் சடங்குகள் :** ஆதி மனிதன் வேட்டையில் சந்தித்த பேரிழப்புகளைத் தவிர்க்க வேட்டைக்குச் செல்லும் முன் வேட்டைக்கான ஒத்திகையை நிகழ்த்தினான். இந்த ஒத்திகை அவனுக்குப் பலவித நன்மையை அளித்தது. ஆதிமனிதன் "வேட்டைக்கு செல்லும் முன்னர் தான் வேட்டையாடும் விலங்கினைப் பிடிப்பது போலவும் கொல்லுவது போலவும் ஒரு கற்பனையான நிகழ்சியினை நடனம் அல்லது ஓவியத்தின் வாயிலாக வெளிப்படுத்தினான்"[7]. என்று சிவசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். வேட்டை நடனமே பிற்கால கலை இலக்கியங்களின் தோற்றத்திற்கு வழிகோலியிருக்கும். "வேட்டைச் சடங்குகள் பெரும்பாலும் முல்லைநில ஆயர்கள் ஏறு

தழுவிய பின்னர் மகளிரும் மைந்தரும் ஆடும் குரவையை ஒத்துள்ளன."[8] என்று குறிப்பிடுகிறார். இவ்வேட்டை ஒத்திகையினை வள்ளுவர்,

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு" (குறள் 467)

எனும் வரிகளில் புலப்படுத்துகிறார்.

மேலும் எந்த ஒரு செயலையும் முன்கூட்டியே ஆராய்ந்து செய்யவேண்டும் என்பதனை 429,435,512 போன்ற குறட்பாக்களில் தெரிவிக்கிறார். இவை ஆதி சமூகத்திய வேட்டை ஒத்திகையின் எச்சமாகவே இருந்திருக்கவேண்டும்.

**தரநிலைச் சமூக அமைப்பு:** தரநிலைச் சமூக அமைப்பில் மன்னன் உயர்வாகக் கருதப்பட்டதால் அவனுக்கென தனித்த சில தகுதிகள் வரையறுக்கப்பட்டன. படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் போன்றவை மன்னனுக்குரிய குணங்களாகக் குறிக்கப்பட்டதை,

"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" (குறள் 381)

எனும் குறள் வரிகளில் குறிக்கிறார். செங்கோல் (542) வெண்கொற்றக்குடை (389) போன்ற பொருட்களும் மன்னனின் சிறப்பு அடையாளங்களாகக் கருதப்பட்டன.

ஆதிசமூக அமைப்பின் முல்லைநிலத் தலைவன் 'ஆயர்கோன்' எனப்பட்டான். இச்சொல்லுக்கு ஆயர்கூட்டத்தின் தலைவன் என்று பொருள். ஆயர்கோன் எனும் சொல்லிலிருந்தே 'கோ' (அரசன்) எனும் சொல் தோற்றம் பெற்றிருக்கவேண்டும். கோ என்பதற்கு அரசன் என்பது பொருள். எனவே ஆயர் தலைவனின் கையில் இருந்த கோலின் எச்சமாகவே தரநிலைச் சமூக அமைப்பில் காணப்பெற்ற மன்னனின் செங்கோல் விளங்கியிருக்கவேண்டும். இச்செங்கோலின் சிறப்பு கருதியே வள்ளுவர் செங்கோன்மை எனும் ஓர் அதிகாரத்தையே யாத்துள்ளார் எனில் மிகையாகாது. மன்னன் செங்கோல் கொண்டு முறையான ஆட்சி நடத்தினால் அந்த ஆட்சி உலகம்தழுவிய சிறப்பினை உடையதாக இருக்கும் என்கிறார். இதனை,

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு" (குறள் 544)

எனும் குறளடிகள் பறைசாற்றுகின்றன.

இனக்குழுச் சமூக அமைப்பில் தலைவன் மக்களோடு ஒன்றி வாழ்ந்தான். தரநிலைச் சமூக அமைப்பில் மன்னன் x மக்கள் எனும் பாகுபாடு தோற்றம் பெற்றது. மன்னனும், அவனைச் சார்ந்தவர்களும் உயர்வாகவே கருதப்பட்டனா. மன்னனோடு, மன்னனின் உதவிக்கென்று ஒரு குழுவினரே செயல்பட்டனர். அமைச்சர், படைத்தளபதி, மதகுருமார் போன்றோர்களை இதற்குச் சான்றாக்கலாம். இவாகள் மன்னனின் நலன் நாடுபவர்களாகவே விளங்கினர். அதனால் எந்த ஒரு செயலைச் செய்தாலும் மன்னனும் இவர்களைக் கலந்து ஆலோசித்தை செய்தான். மன்னனானவன் அமைச்சர் முதலானோர்களுடன் சேர்ந்து செயல்பட்டதை,

"எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள் 423)

எனும் குறட்பாவும்,

"அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்" (441)

எனும் குறட்பாவும் குறிக்கின்றன.

ஆதிக்க வெறி, அடிமைத்தனம் போன்ற செயல்களின் விளைவுகளைப் (போர் வெற்றிகளைப்) புலவர்கள் புகழவேண்டும் என மன்னன் விரும்பினான். புகழ் விரும்பியான மன்னனின் புகழைப் பாடுவதெற்கென்றே ஒரு கூட்டம் இருந்தது. வீரநிலைக்காலத்தில் பாணர்களும், சங்ககாலத்தில் புலவர்களும் இப்பணியைச் செம்மையாகச் செய்தனர். இதன்வழி மன்னர்கள் புகழ் விரும்பிகளாக இருந்ததை அறிய முடிகிறது.

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்" (394)

எனும் வள்ளுவர் வரிகள் தரநிலைச் சமூக அமைப்பில் நிலவிய இந்நிலையைப் படம் பிடிக்கின்றன.

**அடிக்குறிப்புகள்:**

1. பக்தவச்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல், ப-305
2. ஏங்கெல்ஸ், குடும்பம், தனிச்சொத்து, அரசு, ப-35
3. ………… புறநானூறு (பாடல் எண் 220:1)
4. ஏங்கெல்ஸ், குடும்பம். தனிச்சொத்து, அரசு, பக் 37-38
5. நா. வானமாமலை, ஆராய்ச்சி, ப-38
6. இரா. முருகன், சங்கப்பாக்ககளில் தொல்குடிக் கூறுகள், ப-128
7. ஆ. சிவசுப்பிரமணியன், ‘மந்திரம்’, நாட்டார் வழக்காற்றியல், ப-20
8. ப.பழனியப்பன், சங்க இலக்கியங்களில் இனக்குழுச் சடங்குகள் (இ.ப.த.ம. ஆய்வுக்கோவை), ப.427

**துணை நின்ற நூல்கள்:-**


1. கதிர் மகாதேவன் — ‘பழந்தமிழர் வீரப்பண்பாடு – ஒப்பிலக்கியக் கணிப்பு’, ஏரக வெளியீடு மதுரை.
2. சுப்பிரமணியன்.கா — ‘சங்க காலச் சமுதாயம்’ நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட். சென்னை (1982).
3. செண்பகம் ராமசுவாமி — ‘கிரேக்க லிரிக் கவிதைகளும், சங்க இலக்கியக் கவிதைகளும் ஒப்பீடு’, பாத்திமாக் கல்லூரி, மதுரை (1987).
4. பக்தவச்சல பாரதி — ‘பண்பாட்டு மானிடவியல்’ மணிவாசகர் பதிப்பகம் சென்னை (1999)
5. மார்க்ஸ் ஏங்கெல்ஸ் (மொ.பெ) — ‘குடும்பம், தனிச்சொத்து, அரசு’ (தொகுதி – 11) முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கொ (1989)
6. முருகன் இரா — ‘சங்கப் பாக்களில் தொல்குடிக் கூறுகள் செல்வி பதிப்பகம், புதுவை (2003)


**முடிவுரை:** ஒவ்வொரு படைப்பாளியும் தான் வாழ்ந்தகால நிகழ்வுகளையோ அல்லது வாழுங்கால நிகழ்வுகளையோ பாடுபொருளாக கொண்டு இலக்கியம் படைப்பது இயல்பு. இவ்வகையில் வள்ளுவத்தில் மேற்சுட்டிய இருவகையான நிகழ்வுகளும் பாடுபொருளாக உள்ளன. ஆதிசமூக அமைப்பில் நிலவிய இனக்குழு வாழ்க்கை முறை, வேட்டைச் சமூக அமைப்பு, தரநிலைச் சமூக அமைப்பு போன்றவற்றின் கூறுகள் வள்ளுவத்தில் காணப்படுகின்றன என்பது மறக்க முடியாது உண்மை.